# 11

## நாமகரணமற்ற கிறிஸ்தவம்:

# எதற்குள் ஞானஸ்நானம்?

நாமகரணத்துவமற்ற முதல் கூட்டத்தில் பெந்தெகொஸ்தே நாளன்று சுவிசேஷம் அறிமுகப்படுத்தப்பட்ட பொழுது வெளிப்பட்ட பேதுருவின் போதனையில், நாம் நிலைத்திருக்கையில் இது ஒன்று மட்டுமே இப்பாடக் கருத்தின் மீதான போதனையாக உள்ளது என்ற காரணத்தினால் நாம் அவ்வாறு செய்யவில்லை. அப். 2ல் உள்ளதைக் காட்டிலும் மிகத் தெளிவான வேத வசனங்கள் கூட உள்ளன. இந்த முதல் கூட்டமானது ஏவப்பட்ட அப்போஸ்தலர்களைச் சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தும்படி பரிசுத்த ஆவியானவரின் முதல் ஊழியமாக இருந்த காரணத்தினால் நாம் அங்கு செய்யப்பட்ட போதனையில் நிலைத்திருக்கின்றோம்.

அதிகம் விவாதிக்கப்படும் தலைப்பான ஞானஸ்நானம் பற்றிய மூல உபதேசத்தை நாம் கவனமாய்ப் பரிசோதிக்க வேண்டும். இவ்விஷயம் குறித்து பிரிவினைக்கான காரணம் எதுவுமில்லை என்பதை நேர்மையுள்ள இருதயங்கள் யாவும் காண்பது அவசியமாகும். இந்தக் கூட்டத்தில் பேதுரு, இயேசுவை ஆண்டவர் மற்றும் கிறிஸ்து என்று உறுதியாய் அறிதல், மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகிய நிபந்தனைகளின் பேரில் இரட்சிப்பு அல்லது மன்னிப்பை அளித்தாரா என்று நாம் காண்போம். இது நிச்சயமாகவே, இழந்து போகப்பட்ட பாவிக்கு மன்னிப்பிற்கான பரலோகத்தின் நிபந்தனைகள் பற்றிய விவாதத்தை முடித்து வைக்க வேண்டும். அதிலும் சிறப்பாக, இது, எருசலேம் தொடங்கி சகல நாடுகளுக்கும் சென்று மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் பிரசங்கிக்கும்படி இந்த போதகர்களுக்குக் கட்டளையிடப்பட்டதால் மற்றும் அவர்கள் உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப் பட்டதால் இது பற்றிய கேள்வியை முடித்து வைக்க வேண்டும் (அப். 1:8). ஊழியம் வழுவாத வகையில் சரியாக இருப்பதற்காக அவர்களின் ஊழியத்தில் வழிநடத்த தெய்வீக வல்லமை இறங்கி வரும் வரையில் அவர்கள் "காத்திருக்கும்"படி இயேசு அவர்களிடம் கூறியிருந்தார் (லூக். 24:46-49). இந்த போதகர்கள் தங்கள் கர்த்தரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்திருந்தால் - அவர்களை வழிநடத்தப் பரிசுத்த ஆவியானவர் வரும் வரையில் எருசலேமில் காத்திருந்து, பிறகு எருசலேமில் ஊழியத்தைத் தொடங்கியிருந்தால் (இவை எதுவுமே சந்தேகப்படக் கூடாது) - அந்த ஊழியமானது மிகவும் சரியானதாகவும் தவறாயிருக்க முடியாததாகவும் உள்ளது.

பேதுரு தாம் செய்யும்படி அனுப்பப்பட்ட பாவமன்னிப்பை அளித்திருந்தால், பாவமன்னிப்பு பெறக் கூடிய நிபந்தனைகளையும் அவர்

கொடுத்திருப்பார் என்பது நிச்சயம். ஆகையால் எருசலேமில் நடந்த இந்தக் கூட்டத்தில், குற்றம் உணர்த்தப்பட்ட இருதயங்களுக்கு மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானம் என்ற நிபந்தனைகளைப் பரிசுத்த ஆவியானவர் அளித்திருந்தால், இது பரலோகத்தின் சித்தமாகவும் போதனையாகவும் உள்ளது. அதனால் தான் நாம் இந்த ஊழியத்தில் நிலைத்திருக்கின்றோம். பேதுரு பரிசுத்த ஆவியானவரின் நேரடியான வழிநடத்துதலினால், மக்களை அவர்கள் மன்னிக்கப்படும்படியாக ஞானஸ்நானம் பெறும்படி கட்டளை யிட்டார். அவர் பேசியது உண்மை என்பது போலவே அந்த சத்தியமும் நிச்சயமானதாக உள்ளது, உலகத்தின் கல்வியாளர்கள் அந்த மொழிநடைக்கு விளக்கம் தருபவர்களாய் உள்ளனர். நேர்மையான இருதயம் ஒவ்வொன் றிற்கும் இந்த நிலைப்பாட்டைத் தெளிவாக்குவதற்கு நான் ஊக்கத்துடன் பணியாற்றியுள்ளேன். முரட்டுத்தனமானது, மொழியைப்பற்றிய ஊக்கமான ஆய்வுக்குப் பிறகும் இந்த விஷயங்களைக் குறித்து இருதயங்களில் பிரிவை உண்டாக்கும்.

இந்த முதல் கூட்டத்தில் பேதுரு போதித்தது என்ன என்பது முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பிறகு, இப்பொழுது இந்தப்பாடக் கருத்தைக் குறித்த ஆவியானவரின் போதனை எல்லாவற்றுடனும் பேதுருவின் போதனை இசைவாயுள்ளதா என்பது தெளிவாய் உள்ளதா? என்று நான் கேட்க வேண்டும். இந்தக் கேள்வியைக் கேட்பது என்பது இதற்குப் பதில் அளிப்பதற்காகத் தான். எந்த ஒரு கருத்தின் மீதும் ஆவியானவரின் போதனைக்கு முரண்பாடாகப் பேதுரு போதித்திருந்தால் அவர் பாவமன்னிப்பு என்ற போதனையைப் பொறுத்தமட்டில் உண்மையான போதகராய் இருந்திருக்க மாட்டார். ஆகையால், எருசலேமில் நடந்த அவருடைய போதனையானது, ஆவியானவரின் மற்ற எல்லாப் போதனைகளுடனும் ஒத்திருக்க வேண்டும்.

எருசலேமில் நடந்த இந்தக் கூட்டத்திற்குச் சற்று முன்னர், பேதுருவுக்கும் மற்ற அப்போஸ்தலர்களுக்கும் இந்த மாபெரும் ஊழியத்தைப் பற்றிய கட்டளையானது எஜமானரிடத்திலிருந்து தரப் பட்டது. எருசலேமில் நடந்த இந்தக் கூட்டத்தில் பேதுரு அந்தக் கட்டளையை நிறைவேற்றிக் கொண்டிருந்தார். அவர்களுக்குத் தரப்பட்ட கட்டளைகள் யாவை? மத்தேயு சுவிசேஷத்தின்படி, அந்தக் கட்டளைகள் பின்வருமாறு:

> வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் (மத். 28:18-20).

மத்தேயு பதிவு செய்துள்ளபடி இவைகளே கட்டளைகளாயிருந்தன; மற்றும்

*இவற்றைப் பெந்தெகொஸ்தே நாளன்று பேதுரு கடைப் பிடிக்காதிருந்தால், அவர் உண்மையற்ற போதகராய் இருந்திருப்பார். ஞானஸ்நானத்தைக் குறித்து அவர் இந்தக் கட்டளைகளுக்கு இசைவில்லாத எதையாவது போதித்திருந்தால், பேதுரு ஏவுதல் பெற்ற போதகர் என்பதை நாம் புறக்கணிக்க வேண்டும்.*

*இதற்கு நேர் மாறாக, பெந்தெகொஸ்தே நாளன்று நடந்த இந்த முதல் கூட்டத்தில் பேதுரு, தமது உரையைக் கேட்டவர்களுக்கு, இயேசுவின் வாழ்வு, அவரது மரணம், அவரது உயிர்த்தெழுதல் மற்றும் பிதாவின் வலது புறத்தில் அவர் முடிசூட்டப்படுதல் ஆகியவற்றைப் போதித்தார். தேவன் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை ஆண்டவரும் கிறிஸ்துவு மாக்கினாரென்று அவர்கள் உறுதியாய் அறிந்து கொள்ளும்படி அவர் அழைத்தார். அப்பொழுது இயேசுவைப் பற்றிய இவை யாவற்றையும் அறிந்தவர்கள் இயேசுவின் சீஷர்களாக அல்லது கற்பவர்களாக ஆக்கப் பட்டார்கள் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. இருப்பினும், தெய்வீகக் கட்டளைகளின்படி, சீஷர்களாக்கிய பிறகு, அப்போஸ்தலர்கள் இந்த சீஷர்களை ஏதோ ''ஒன்றுக்குள்'' ஞானஸ்நானப்படுத்த வேண்டிய தாயிருந்தது. இந்த சீஷர்கள் தங்கள் ஞானஸ்நானத்திற்கு முன் அந்த ஏதோ ஒன்றுக்குள் அது எதுவாக இருந்திருந்தாலும் பிரவேசித்திருந்ததில்லை என்பது உறுதி. இல்லையென்றால், சுவிசேஷத்தின் இந்தப் பரிசுத்த பிரசங்கியார்கள் அவர்களை "அதற்குள்" ஞானஸ்நானப் படுத்தியிருக்க முடிந்திராது.*

*ஒவ்வொன்றுமே மெதுவான மற்றும் உண்மையான ஆழ்ந்தறிதலைச் சார்ந்துள்ளதால் இவ்விடத்தில் நான் (உங்களை) ஜாக்கிரதையாய்க் கவனியுங்கள் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன். இவைகள் பூமியின் மீது நமது கர்த்தருடைய என்றென்றும் நிலைத்திருக்கக் கூடிய கட்டளைகளாய் உள்ளன. இந்த சீஷர்கள் "எதற்குள்" ஞானஸ்நானம் பெற்றார்களோ, அது எதுவாயிருப்பினும் "அதற்குள்" தான் ஒவ்வொரு சீஷரும் ஞானஸ்நானம் பெற வேண்டும், மற்றும் அவர் ஞானஸ்நானம் பெறாமல் "அதற்குள்"ளா வது என்பது சாத்தியமாகாது. பேதுருவும் மற்றவர்களும் சீஷர்களை ''எதற்குள்ளாக'' ஞானஸ்நானப்படுத்த வேண்டியதாயிருந்தது? ''பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள்'' என்றே தெய்வீகக் கட்டளை குறிப்பிட்டது. ஞானஸ் நானத்திற்கு முன்பு, இந்தப் பிரசங்கியார்களால் சீஷராக்கப்பட்டவர்கள், பிதா குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியின் நாமத்திற்குப் புறம்பே இருந்தார்கள், ஆனால் அவர்கள் ஞானஸ்நானத்தில் இதற்குள் பிரவேசித்தனர். ஒருவர் தேவனுடைய குடும்பத்தின் "பெயருக்கு" புறம்பே இருக்கும் பொழுது அவர் தேவனுடைய குடும்பத்திற்குள், தேவனுடைய பிள்ளையாக இருக்க முடியுமா? அவர் பிதாவின் நாமமாகிய குடும்பப் பெயரைத் தரித்துக் கொள்ளாமல் பிதாவின் ஆசீர்வாதங்களுக்குச் சுதந்தரவாளியாக முடியுமா?*

*திருமணத்தில் இணைகின்ற வாலிபர் ஒருவரையும் இளம் பெண் ஒருத்தியையும் கற்பனை செய்து பாருங்கள். இந்த இளைஞரின் பெயர்*

ஜோன்ஸ் என்றும் இந்த இளம் பெண்ணின் பெயர் ஸ்மித் என்றும் உள்ளன. இந்த இளம் பெண் இந்த இளைஞரைப் பல மாதங்களாக நேசித்திருந் திருக்கிறாள்; ஆனால் இன்னமும் அவர்கள் திருமணம் செய்து கொள்ள வில்லை. அவள் இன்னமும் செல்வி. ஸ்மித் ஆகவே இருக்கிறாள்; ஆனால் திருமணச் சடங்கில் சில வார்த்தைகளைப் பேசியதினால், அவள் இந்த இளைஞரைத் திருமணம் செய்து கொள்கின்றாள். அதே வழிமுறையினால் மற்றும் அதே வேளையில், அவள் அந்தத் தந்தை மற்றும் மகன் ஆகியோரின் பெயருக்குள் கடந்து வருகின்றாள். இனி அவளது பெயர் "ஜோன்ஸ்" என்றே இருக்கும். அவள் "ஜோன்ஸ்" என்ற பெயருக்குள், ஜோன்ஸின் உடமைகளுக்கு வாரிசாகப் பிரவேசிக்கின்றாள். இது போலவே, பாவிகளைக் கிறிஸ்துவுடன் இணையும்படி அதன் மூலம் அவர்கள் "மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர் களாகும்" (ரோமர் 7:4)படி வழிநடத்தவே அப்போஸ்தலர்கள் இந்த உலகத்தினுள் அனுப்பப் பட்டார்கள், இதனால் அவர்கள் (ஞானஸ்நானம் பெறுபவர்கள்) தேவனுக்கென்று கனி கொடுக்கக் கூடும். அவர்கள் எப்பொழுது கிறிஸ்துவை விவாகம் செய்து கொள்கின்றனர்? பிதா குமாரன் (பரிசுத்த ஆவியின்) நாமத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பாகவா அல்லது அதற்குள் பிரவேசிக்கும் பொழுதா? அவர்கள் தேவனுடைய குடும்பத்திற்குள் எப்பொழுது பிரவேசிக்கின்றனர்? குமாரனைத் திருமணம் செய்யும் முன்பா அல்லது திருமணத்திலா? மத்தேயு 28:19, "... பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து ..." என்று கூறுகின்றது. தெய்வீகக் கட்டளையினால் இயேசுவின் சீஷர்களாக்கப்பட்ட இவர்கள், தெய்வீக நாமத்தில் ஞானஸ்நானம் பெறுவதினாலேயே தேவனுடைய குடும்பத்தில் பிள்ளைகளாக வேண்டியிருந்தது என்பதை எவர் சந்தேகப்பட முடியும்?

பெந்தெகொஸ்தே நாளன்று, பேதுரு இந்தக் கட்டளைகளின் கீழ், விசுவாசித்த, துக்கமடைந்த, குற்ற உணர்வடைந்த இருதயங்களை, கிறிஸ்துவின் புதிய சீஷர்களை, பாவமன்னிப்புக்"கென்று" (eis) ஞானஸ்நானம் பெறும்படிக் கூறினார். இந்தக் கட்டளைகளைக் கொடுத்ததில் அவர், நமது இரட்சகர் பயன்படுத்திய அதே வார்த்தையைப் பயன்படுத்தி, அவர்கள் "எதற்கு" அல்லது "எதற்குள்" ஞானஸ்நானம் பெற வேண்டும் என்பதைக் குறிப்பாகச் சுட்டிக் காண்பித்தார்.

Eis என்ற வார்த்தையைத் தொடர்ந்து வரும் செயல்படு பொருள்தான் இந்தச் சொற்றொடராக்கத்தில் உள்ள ஒரே ஒரு வேறுபாடாக இருக்கின்றது. கிறிஸ்துவால் தரப்பட்ட கட்டளைகளில், விசுவாசிகளை அப்போஸ்தலர்கள் தேவனுடைய மாபெரும் பெயருக்"குள்ளாக" ஞானஸ்நானப்படுத்த வேண்டியிருந்தது; பேதுருவின் மொழிநடையில், அவர்கள் பாவமன்னிப்புக்"கென்று" ஞானஸ்நானம் பெற வேண்டி யிருந்தது. என்றால், இருதயத்தின் முழு நிச்சயத்துடன் தன்னைக் கிறிஸ்துவுக்கு ஒப்புவிக்கும் ஆத்துமாவானது பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானப்படுத்தப் படுகையில், பாவமன்னிப்புக் "கென்றும்" ஞானஸ்நானப் படுத்தப்படுவதை யார் சந்தேகப்பட முடியும்?

*உண்மையில், அவர் அந்த நாமத்திற்"குள்" பிரவேசியாமல், பாவமன்னிப்புக் "கென்று" ஞானஸ்நானம் பெற்றிருக்க முடியாது. இவைகள் ஒன்று போல் உள்ள நோக்கங்கள் அல்ல, ஆனால் "பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே" என்பது ஞானஸ்நானத்தினாலே பிரவேசிக்கப்படக் கூடிய மாபெரும், விசாலமான தெய்வீக உறவாக உள்ளது; இது அந்த உறவில் காணப்படுகின்ற எல்லா ஆசீர்வாதங்களையும் உள்ளடக்குகின்றது. பாவமன்னிப்புக்''கென்றும்'' மற்றும் அந்தத் தெய்வீக உறவின் சகல ஆசீர்வாதங்களுக்"குள்ளும்" ஒரே வேளையில் ஞானஸ்நானம் பெறாமல் எவரொருவரும் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ் நானம் பெற முடியாது. ஆகையால், கர்த்தரைக் கொலை செய்திருந்தவர் களுடன் பெந்தெகொஸ்தே நாளன்று பேதுரு, பேசிக் கொண்டிருக்கையில் அவர்களின் இருதயங்கள் இந்த விசேஷித்த பாவத்திற்காகக் கனத்த துக்கத்தினால் தாழ்ந்து இறங்கின மற்றும் அவர்கள் இதிலிருந்து விடுதலைக் காகக் கதறினர், எனவே அவர்கள் தங்களின் பாவமன்னிப்புக்"கென்று"* (eis) *ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று கூறப்பட்டது. இதுதான் அவர்கள் எதிர்பார்த்து, கதறி, வெட்கப்பட்டு மற்றும் தேடிக் கொண்டிருந்த விஷயமாய் இருந்தது. பேதுரு அவர்களுக்குத் திட்டவட்டமாக பதில் ஒன்றைக் கொடுத்தார்; ஆனால் அவர்களிடம் அவர், "பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெறுங்கள்'' என்று (மட்டும்) கூறியிருந்தால் (கூட) இந்தக் கட்டளைக்கு அவர்களின் தாழ்மையான கீழ்ப்படிதலானது அவர்களைப் பாவ மன்னிப்புக்"கென்று" கொண்டு வந்திருக்கும். இப்படிப்பட்ட மன்னிப்பு என்பது இந்த தெய்வீக உறவினுள் பிரவேசிக்கின்ற யாவராலும் காணப்படக் கூடிய ஆசீர்வாதங் களில் ஒன்றாகவே உள்ளது.*

*எபேசுவில் பவுல், ''யோவானின் ஞானஸ்நானத்திற்குள்ளாக'' ஞானஸ்நானம் பெற்றிருந்த சுமார் பன்னிரெண்டு மனிதர்களைக் கண்டார் (அப். 19:3), இந்த ஞானஸ்நானமானது ஒரு தெய்வீகக் கட்டளையாய் இருந்து, பின் ஒழிந்து போன நிலையில் இவர்களை அவர் கண்டார் என்பது தெளிவு. இயேசு இனிமேல் தான் வரவேண்டும் என்று அவர்களுக்குப் போதிக்கப்பட்டிருந்தது; உண்மையில் அவர் பவுலின் எபேசு வருகைக்குப் பல ஆண்டுகள் முன்பாகவே ஏற்கனவே வந்திருந்து, ஏற்கனவே மரித்திருந்து, மற்றும் ஏற்கனவே கல்லறையிலிருந்து உயிர்த்திருந்தார், ஆனால் அவருக்காக(அவர் வருகைக்காக)க் காத்திருக்கும்படி கூறப்பட்டு அவர்கள் ஞானஸ்நானம் செய்விக்கப்பட்டார்கள். யோவானின் ஞானஸ்நானமானது ''பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற'' ஞானஸ்நானமாய் இருந்ததால் அவர்கள் பாவமன்னிப்புக்"கென்று" ஞானஸ்நானம் பெற்றிருந் தனர் என்பது நிச்சயம். இருப்பினும், அவர்களுடைய ஞானஸ்நானமானது, சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்த கர்த்தர்மேல் விசுவாசம் கொண்டதினால் தூண்டப்பட்டதாயிருக்க வேண்டிய வேளையில், அது வரப் போகிற ஒரு கர்த்தர்மேல் கொண்ட விசுவாசத்தினால் தூண்டப்பட்ட தாயிருந்தது. அவர்கள், கிறிஸ்துவின் சுவிசேஷத்தினுடைய மாபெரும் உண்மைகளை அறியாதவர்களாய் இருந்தார்கள்; அவர் (இயேசு) ஒரு*

*உண்மையான இரட்சகராய் இருப்பதற்காக, ''இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் கொடுப்பதற்காக'' தேவனுடைய வலது புறத்திற்கு உயர்த்தப்பட்டார் என்பதை அவர்கள் அறியாதிருந்தார்கள். ஆகையால், பவுல் இந்த மாபெரும் உண்மைகளை அவர்களுக்குப் போதித்து ''கர்த்தராகிய இயேசுவின் நாமத்தி'னாலே' ஞானஸ்நானம் பெறும்படிக்கு அவர்களுக்குக் கட்டளையிட்டார்'' (அப். 19:5).*

*இந்த மனிதர்களுக்குப் பவுலின் கட்டளையானது, எருசலேமில் குற்றம் உணர்த்தப்பட்ட நிலையில் மனம் வருந்திய மூவாயிரம் விசுவாசிகளுக்குப் பேதுரு கொடுத்த பதிலில் இருந்து பொருள் மாறுபாடுள்ளதாக இருக்கின்றதா? ''அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமமும் கட்டளையிடப்படவும் இல்லை'' (அப். 4:12). மூவாயிரம் பேரும் மன்னிப்புக்''கென்று'' (eis) ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று பேதுரு கூறினார்; வேறு எப்பெயரிலும் மன்னிப்பு அல்லது இரட்சிப்பு என்பது இல்லாதலால், நாம் எப்பெயரினால் இரட்சிக்கப்பட வேண்டுமோ, அப்பெயரினாலேயே ஞானஸ்நானம் பெறும்படி அவர்களுக்குப் பேதுரு உண்மையில் கட்டளையிட்டார். இரட்சிப்பு என்பது வேறு எப்பெயரிலும் இல்லாததாலும், மன்னிப்பு அல்லது மீட்புக்காக ஞானஸ்நானம் பெறும்படி பேதுரு கூறியதாலும், அவரது பதிலானது அந்த நாமத்திற்குள் அவர்களின் பிரவேசத்தை மறைமுகமாக உணர்த்தியது. இரட்சிப்பு என்பது கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்''குள்'' இருக்கின்றது, அதற்கு ''வெளியே'' இருப்பதில்லை; அது போலவே, அது (இரட்சிப்பு) வேறு எப்பெயரி''லும்'' இல்லை. இந்த மக்கள் கிறிஸ்துவுக்''குள்'' இருக்கத் தேவையான இரட்சிப்படையும்படி ஞானஸ்நானம் பெற்றார்கள்.*

*இவ்விடத்தில் நேர்மையான இருதயங்கள் பிரிந்து போக முடியாது என்று மீண்டும் கூற நான் அனுமதியை வேண்டுகின்றேன். இயேசு ஜெபித்த ஒருமைப்பாட்டை நாம் விரும்பினால் பிரிவினை இருக்க முடியாது. ''ஆண்டவரே, நான் என்ன செய்ய வேண்டும்?'' (அப். 22:10) என்று நொறுங்கிய சித்தத்துடன் நறுங்கிய ஆவியுடனும் கதறிய ஆவிக்கு ஆவியானவரின் சுய வார்த்தைகளையே நானும் கூட விசுவாசித்து குற்றம் உணர்த்தப்பட்ட இருதயத்திற்குக் கூற விரும்புகின்றேன்:*

> *பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து (மத். 28:19).*
> *ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் (அப். 2:38).*
>
> *அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப். 19:5).*
>
> *நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு (அப். 22:16).*

*நான் அவருக்கு முன்பாக எவ்வித விளக்கமும் இன்றி இந்த வார்த்தை களை முன் வைத்து, அவரது இருதயம் பதிலைப் புரிந்து கொள்ளும்படி விட்டு, ஆவியானவரின் தெளிவான அறிவுறுத்தல்களை அவர் புரிந்து கொள்வார் என்று துணிவதற்கு மனதாய் இருக்கின்றேன்.*

*உங்களது நாமகரணக் கூட்டம் “க்கென்று” மற்றும் “க்குள்” என்ற வார்த்தைகளுக்கு விளக்கம் இன்றி இடர்ப்பாடு அடையும் என்று நீங்கள் பயப்படுகின்றீர்களா? தேவனுடைய புத்தகமானது நீக்கிப் போடுகின்ற அதே வார்த்தைகளை உங்கள் நாமகரணத்துவம் மேற்கோள் காட்டி, பின்பற்றினால் அதைத் தியாகம் செய்ய மனமற்று இருக்கின்றீர்களா? நீங்கள் கிறிஸ்தவர்களாக மட்டுமே இருப்பதற்கு திருப்தியடைந்துள்ளீர் களா? புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்கள் இருந்ததுபோல கிறிஸ்தவராக மட்டும் இருக்க நீங்கள் திருப்தியடைவீர்களா? கலிலேயாவின் மனிதரைத் தாழ்மையாய்ப் பின்பற்றும் ஒரு எளிய மனிதராய் இருப்பது போதாதா? புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் நாமகரணக் கிறிஸ்தவர்கள் இல்லாததால், இப்பொழுது அவ்வாறு இருப்பதற்கு வேதாகம ரீதியான காரணங்கள் எதையாவது நீங்கள் நினைத்துப் பார்க்க முடியுமா?*

*நாமகரணத்துவமானது நமது இரட்சகரை விசுவாசிக்கும் யாவரும் அவரும் பிதாவும் ஒன்றாயிருப்பது போல ஒன்றாயிருப்பார்களாக என்ற அவரது ஜெபத்தை என்றென்றும் தடை செய்கின்றது (யோவா. 17:11). நமது கர்த்தர், நமக்குள் பிரிவினை இருக்கக் கூடாது, ஆனால் நாம் யாவரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகள் இல்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர் பொருந்தியிருக்க வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுக்கின்றார் (1 கொரி. 1:10). பிரிவினைகள் இருக்கும் வரைக்கும் அவருடைய சித்தமானது ஒருக்காலும் கீழ்ப்படியப்பட முடியாது. கிறிஸ்துவினிமித்தம் ஏன் கிறிஸ்தவராக மட்டும் இருக்கக் கூடாது?*

## ஞானஸ்நானத்தில் அவரோடே கூட அடக்கம் பண்ணப்படுதல்

*“ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம் பண்ணப் பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந் தெழுப்பின தேவனு டைய செயலின் மேலுள்ள விசுவாசத் தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்” (கொலோ. 2:12).*